# கதையை வாசித்து நிரல்படுத்துக.

## முடிந்த போன தீபாவளி

ஒருநாள் தீபனும் அவ்வாறு வெடித்து விளையாடுவதை அவனின் அப்பா கண்ணுற்றார். மகனை அழைத்து, "தீபா, அவ்வாறு வெடித்து விளையாடாதே, அது ஆபத்தை விளைவிக்கும்", என்று எச்சரித்தார். இருப்பினும், தீபன் அதைப் பொருட்படுத்தவில்லை. நண்பர்களின் தூண்டுதல் மற்றும் தன் ஆசையினால், 'பாட்டிலில்' பட்டாசுகளைத் திணித்து கொளுத்தித் தொடர்ந்து விளையாடினான். திடீரென பட்டாசு இருந்த 'பாட்டில்' வெடித்தது. வெடித்த பாட்டிலின் கண்ணாடிச் சிதறல்கள் தீபனின் முகம், கைகால், உடல் பகுதியில் தைத்தன.

1

"அப்பா, தாங்கள் சொன்னதை நான் கேட்கவில்லை. என்னை மன்னியுங்கள்", என்று தந்தையைப் பார்த்துக் கதறினான். "மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்", என்று தீபனின் மாமா அறிவுரைத்தார்.

2

தீபாவளியை முன்னிட்டு ஊர் மக்கள் ஆடை ஆபரணங்கள் வாங்குவதிலும் பலகாரங்கள் செய்வதிலும் தீவிரமாக இருந்தனர். பிள்ளைகள் பட்டாசு, மத்தாப்பு என்று கொளுத்தி விளையாடிக் கொண்டிருந்தனர்.

3

தீபனும் மற்ற பிள்ளைகள் போலவே தன் தோழர்களுடன் பட்டாசு கொளுத்தி விளையாடினான். அதில் அவன் திருப்தி அடையவில்லை. முன்பு ஒருநாள் தன் தோழர்கள் மூங்கிலில் 'கார்பைட்' பவுடரைக் கொட்டி வெடித்தால் பன்மடங்கு சத்தம் கேட்கும் என்று கூறக் கேள்விபட்டிருந்தான். மேலும், சிலர் 'பாட்டிலின்' உள் பாட்டாசுகளைத் திணித்து வெடித்து விளையாடுவதையும் நண்பர்கள் சொல்லக் கேட்டிருந்தான்.

4

உடனடியாக தீபன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டான். மருத்துவர்கள் அவனுக்குத் தீவிர சிகிச்சை அளித்தார்கள். பல நாட்கள் அங்கேயே தங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

5

LIVEWORKSHEETS